(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **34**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 செப்தெம்பர் 07, வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியசேன கமகே,** இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திரண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ செஹான் சேமசிங்க

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்** : பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"இலங்கையில் இன மற்றும் மத ஒற்றுமையை உறுதி செய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான தெரிவுக் குழுவில் பணியாற்றுவதற்காக கௌரவ சபாநாயகரின் தலைமையின் கீழ் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவிப்பதற்கு விரும்புகின்றேன்:—

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ (திருமதி) தலதா அதுகோரள

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ ஏ.எச்.எம். பௌஸி

கௌரவ வீ.என். இராதாகிருஷ்ணன்

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ செயிட் அலிஸாஹிர் மௌலானா

கௌரவ ராஜவரோதியம் சம்பந்தன்

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ சீ.பீ. ரத்னாயக்க

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்"

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல் :** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

(i) 2015 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XII ஆம் பகுதியையும் ;

(ii) 2016 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XX, XXI, XXIII மற்றும் XXIV ஆம் பகுதிகளையும் நான்காவது தொகுதியின் V, VII ஆம் பகுதிகளையும் ஆறாவது தொகுதியின் XIII ஆம் பகுதியையும் ; மற்றும்

(iii) 2017 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் பத்தாவது தொகுதியின் XIV, XV ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2018.07.01 முதல் 2018.08.15 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்ப்பித்து அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் கமத்தொழில் அமைச்சு, கமத்தொழில் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. *பாராளுமன்ற அலுவல்கள்:*** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. அமைச்சு சார் ஆலோசனைக் குழுக்கள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 112 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2018 யூன் 20 ஆம் திகதி மற்றும் 2018 யூலை 17 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு ஆகியன பதினொரு (11) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வுகள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2018.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும், சார்பாக அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கமைய, சனாதிபதியவர்கள், அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2015.11.27 ஆம் திகதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமித்துள்ளார். 153(2) ஆம் உறுப்புரைக்கமைய அவரது சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையுமாறு செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும்;

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துடன் தொடர்பாக 2017.12.19 ஆம் திகதி என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றத்தை இத்தால் அகற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், சனாதிபதியவர்களால் 2017.03.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.03.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புக்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்;

(அ) 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கமைய 2015.11.27 ஆம் திகதி முதல் SL-4 சம்பள அளவுத் திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய படிகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மீளமைக்கும்போது SL– 4 சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் அந்தச் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மீளமைத்துச் செலுத்துவதற்கு மற்றும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம், சேவை அனுபவத்தைப் போன்றே முன்னைய சேவைக்குரிய சம்பளத்தின் மீதும் விசேட கவனத்தைச் செலுத்தி 2017.03.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அவருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் ஏற்புடைத்தாகும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 50,000/- விசேட படியொன்றை வழங்குவதற்கும்.

அதற்கமைய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரைக்கமைய, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சார்பாக அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக” என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.05 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.36 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 10 ஆம் மற்றும் 11 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

“(இ) (இ) பிரிவு 39அ வின் (1) ஆம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட மருத்துவ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார சிங்களப் பிரதியில் பிரேரித்த ஒரு திருத்தம்:

" ඇඇඇ 39(අ) වන වගන්තියේ (2) වන උපවගන්තියේ සඳහන් විශේෂඥ දන්ත වෛද්‍යවරුන් විසින් තෝරා පත් කරගනු ලබන එක් සාමාජිකයෙක් යන තැනට පහත උප වගන්ති එකතු කළ යුතුය:-

' ඉඉ 56 වන වගන්තියේ සඳහන් ලියාපදිංචි ඖෂධවේදීන් විසින් තෝරා පත් කරගනු ලබන එක් උපාධිධාරී ඖෂධවේදී සාමාජිකයෙක්ද;

ඉඉඉ (60)(ආ) වගන්තියේ සඳහන් ලියාපදිංචි අතුරු වෛද්‍ය වෘත්තිකයන් අතරින් තෝරා පත් කරගනු ලබන එක් උපාධිධාරී අතුරු වෛද්‍ය වෘත්තිකයෙක්ද;

ඉඉඉඉ (60)(ඒ) වගන්තියේ සඳහන් ලියාපදිංචි පරිපූරක වෛද්‍ය වෘත්තිකයන් විසින් තෝරා පත් කරගනු ලබන උපාධිධාරී පරිපූරක වෛද්‍ය වෘත්තිකයෙක්ද;

ඊ සහ ඊඊ අමාත්‍යතුමා විසින් සාමාජිකයන් දෙදෙනෙකු නම් කරන අතර, එක් සාමාජිකයෙකු මාධ්‍යවේදියෙකු විය යුතු අතර, අනෙක් සාමාජිකයා මහ ජනතාව අතරින් තෝරා පත්කර ගත් අයෙකු විය යුතු ය.'"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

கௌரவ தயாசிறி ஜயசேகர சிங்களப் பிரதியில் பிரேரித்த ஒரு திருத்தம்:

2. (මෙහි මින් මතු "ප්‍රධාන ප්‍රඥප්තිය" යනුවෙන් සඳහන් කරනු ලබන (105 වන අධිකාරය වූ) වෛද්‍ය ආඥාපනතේ 12 වන වගන්තියේ (1) වන උපවගන්තියේ (ඇ) ඡේදයට ඉක්බිතිව ම පහත දැක්වෙන ඡේද ඇතුළත් කිරීමෙන් එම වගන්තිය මෙයින් සංශෝධනය කරනු ලැබේ.

"(ඇඇ) 39 වන වගන්තියේ (1) වන, (3) වන සහ (4) වන උපවගන්තිවල සඳහන් විශේෂඥ වෛද්‍යවරුන් විසින් තෝරා පත්කර ගනු ලබන සාමාජිකයන් තිදෙනෙක්ද;

(ඇඇඇ) 39අ වන වගන්තියේ (2) උප වගන්තියේ සඳහන් විශේෂඥ දන්ත වෛද්‍යවරුන් විසින් තෝරා පත්කර ගනු ලබන එක් සාමාජිකයෙක්;

ඉඉ 56 වන වගන්තියේ සඳහන් ලියාපදිංචි ඖෂධවේදීන් විසින් තෝරා පත් කරගනු ලබන එක් උපාධිධාරී ඖෂධවේදී සාමාජිකයෙක්;

ඉඉඉ (60) ආ වන වගන්තියේ සඳහන් ලියාපදිංචි අතුරු වෛද්‍ය වෘත්තිකයන් අතරින් තෝරා පත් කරගනු ලබන එක් උපාධිධාරී අතුරු වෛද්‍ය වෘත්තිකයෙකු;

ඉඉඉඉ (60) ඒ වන වගන්තියේ සඳහන් ලියාපදිංචි පරිපූරක වෛද්‍ය වෘත්තිකයන් විසින් තෝරා පත් කරගනු ලබන උපාධිධාරී පරිපූරක වෛද්‍ය වෘත්තිකයෙකු;

ඊ සහ ඊඊ අමාත්‍යතුමා විසින් සාමාජිකයන් දෙදෙනෙකු නම් කරන අතර, එක් සාමාජිකයෙකු මාධ්‍යවේදියෙකු විය යුතු අතර, අනෙක් සාමාජිකයා මහ ජනතාව අතරින් තෝරා පත්කර ගත් අයෙකු විය යුතු ය."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 4 முதல் 7 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"முதன்மைச் சட்டவாக்கத்தில் 39அ, 39ஆ, 39இ மற்றும் 39ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 39அ, 39ஆ, 39இ மற்றும் 39ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்- "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர்கள் இயைபான துறையில் தொழில்புரிவதற்கான உரித்துடைமை.

39ஈ. பிரிவு 39ஆ வின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர் ஒவ்வொருவரும் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை மருத்துவ உபகரணங்களின் அல்லது அத்தகைய சேவைகளின்போது வழங்கப்பட்ட ஏனைய சேவைகளுக்கான ஆகுசெலவு உள்ளடங்கலான தொழிலாண்மைசார் அறவீடுகளை கோருவதற்கும் அறவிடுவதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார சிங்கள பிரதியில் பிரேரித்த ஒரு திருத்தம்:

"ලියාපදිංචි විශේෂඥ වෛද්‍යවරුන් හෝ විශේෂඥ දන්ත වෛද්‍යවරුන්ට අදාළ විශේෂඥයකු ලෙස වෘත්තියෙහි යෙදීමට හිමිකම ඇති බව.

(1) "(අ) ප්‍රධාන ප්‍රඥප්තිය යටතේ යන ස්ථානයට පහත සඳහන් වාක්‍යය එකතු විය යුතුය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII , VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(2) "(ආ) නිශ්චිතව දක්වන සුදුසුකම් ඇති යන ස්ථානයට පහත සඳහන් වාක්‍යය එකතු විය යුතු ය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII , VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(3) "39 අ. (1) වෛද්‍ය සේවා ව්‍යවස්ථා සංග්‍රහයේ නිශ්චිතව දක්වා ඇති පරිදි....' යන ස්ථානයට පහත සඳහන් වාක්‍යය එකතු කළ යුතු ය :

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII , VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(4) "39අ. (2) වෛද්‍ය සේවා ව්‍යවස්ථා සංග්‍රහයේ නිශ්චිතව දක්වා ඇති පරිදි....' යන ස්ථානයට පහත සඳහන් වාක්‍යය එකතු කළ යුතු ය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII, VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(5) "39අ. (3) ස්ථානයටද එලෙසම, පහත කොටස එකතු කළ යුතු ය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII, VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(6) "39අ. (3)හි ' ... උපාධි ආයතනයේ යෝග්‍යතා මිනුම් දණ්ඩ සපුරාලන යම් තැනැත්තකු....'යන ස්ථානයට පහත සඳහන් කොටස එකතු විය යුතු ය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII, VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

(7) "39(ආ) උපවගන්තියේ (ඇ) හි'....ප්‍රතීතන සහතිකයක් ඉදිරිපත් කරන්නේ නම්..." යන ස්ථානයට පහත සඳහන් කොටස එකතු කළ යුතු ය:

' ප්‍රධාන ප්‍රඥප්තියේ VIII, VIII (අ), VIII (අඅ) යන කොටස්වලට අදාළ නොවන පරිදි' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

6 ஆம் பக்கத்தில் 14 முதல் 17 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"காலத்துக்குக்காலம் திருத்தப்படக் கூடியவாறானவையும் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் 11 ஆந் தேதிய 1883/17 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புகளினால் கடைசியாகத் திருத்தப்பட்டவையும், 1991 ஆம் ஆண்டு மே 17 ஆந் தேதிய 662/11 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புகள் எனப்; ".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் மற்றும் 7 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகம்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார சிங்களப் பிரதியில் பின்வரும் புதிய வாசகத்தைப் பிரேரித்தார்:-

" වෛද්‍ය සභාවේ සියලුම සාමාජිකයන් - ඉ සහ ඊ යන කොටස් හැර ඉතිරි සියලුම සාමාජිකයන් - ප්‍රධාන ප්‍රඥාප්තියේ 20, 41, 56, 60B සහ 60G යන වගන්ති යටතේ ලියාපදිංචි සාමාජිකයන් විය යුතුය."

“வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் திருத்தமொன்றைப் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி திருத்தப்பட்டவாறு சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம் மற்றும் 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 (2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருந்துகளைப் பதிவுசெய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒழுங்கு செய்கின்ற இராஜதந்திர விஜயங்களில் அரச நிதி தவறாகக் கையாளப்படுதல்):** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப் பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக” என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.42 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பி.ப. 6.22 மணிக்கு பராளுமன்றம், 2018 செப்தெம்பர் 18, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.